# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 06 | பரதநாட்டியம்– I,II | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................................

### பகுதி-I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- பொருத்தமான விடையின் கீழ்க் கீறிடுக.

01. முருகனை வேண்டி ஆடப்படும் கிராமிய நடனம்,
 1) கும்மி 2) கோலாட்டம்
 3) கரகம் 4) காவடி

02. ஸம்யுத ஹஸ்தங்களின் எண்ணிக்கை?
 1) 22 2) 24
 3) 26 4) 28

03. நாட்டடவு அமைந்துள்ள தாளம்,
 1) ஆதி 2) ரூபகம்
 3) ஜம்பை 4) மட்டியம்

04. நால்வேதங்களின் தொகுப்பு,
 1) கண்டிய நடனம் 2) மணிப்புரி
 3) பரதம் 4) கதகளி

05. "முளைப்பாரியின்" போது பயன்படுத்தப்படும் வாத்தியம்?
 1) நாதஸ்வரம் 2) உறுமி மேளம்
 3) மிருதங்கம் 4) தபேலா

60. மகிழ்ச்சியின்பொருட்டு ஆடப்படும் கிராமிய நடனங்களில் ஒன்று?
 1) கரகம் 2) காவடி
 3) கும்மி 4) கொழுந்து நடனம்

07. தியானஸ்லோகத்தில் தாராதி குறிப்பது,
 1) உலகம் 2) உடம்பு
 3) சந்திரன் 4) நட்சத்திரம்

08. நவராத்திரிவிழா கொண்டாடப்படும் மாதம்
 1) புரட்டாதி 2) தை
 3) பங்குனி 4) மார்கழி

09. கோயில் நடனமாதர் எனப்படுவோர்,
 1) அறிஞர் 2) தேவதாசிகள்
 3) தோழிகள் 4) கலைஞர்

10. உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை முகத்தினால் வெளிப்படுத்துவது
 1) பாவம் 2) இராகம்
 3) தாளம் 4) அபிநயம் (10x 1 = 10 புள்ளிகள்)



kalvi.lk

02. **சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

1. பரதத்தின் முழுமுதற்கடவுள் நடராஜப்பெருமான் ஆவார். ( )
2. எசலபெரகரா மார்கழி மாதத்தில் கொண்டாடப்படும் ( )
3. நால்வகை வேதங்களுள் அதர்வணமும் ஒன்றாகும். ( )
4. கால்களை நாட்டிச் செய்வது தட்டடவு எனப்படும். ( )
5. சூரியப்பிறை வலது பக்கமும் சந்திரப்பிறை இடது பக்கமும் அணிதல் வேண்டும். ( )

( 5x2= 10 புள்ளிகள்)

03. **தொடர்புபடுத்துக.**

| | | |
|---|---|---|
| 1) | நாட்டடவு | கற்கடகம் |
| 2) | நேர்த்திக்கடன் | அபூர்வகஸ்தம் |
| 3) | பிரலம்பம் | திரிபதாகம் |
| 4) | தண்டியம் | காவடி |
| 5) | நண்டு | கோல் |

( 5x 2 = 10 புள்ளிகள்)

03. **கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளியை நிரப்புக.**
**(எசலபெரகரா, சிலம்பக்கூடம், தகிட , பஞ்சகச்சம் , குருஸ்லோகம்)**

1) குருர் ப்ரம்மா குருவிஷ்ணு" என்று ஆரம்பிக்கப்படுவது ......................................... ஆகும்.
2) நாட்டியம் கற்றுக்கொடுக்கும் அறை ......................................... எனப்படும்.
3) பரதநாட்டியத்திற்குப் பயன்படுத்தப்படும் ஆடை ......................................... எனப்படும்.
4) சிங்கள மக்களின் பாரம்பரிய விழாக்களில் ......................................... ஒன்றாகும்.
5) திஸ்ர நடையின் சொற்கட்டு ........................... ஆகும். ( 5x 2 = 10 புள்ளிகள்)

LMD Unit Education கல்வி අධ්‍යාපන

## பகுதி-II

➢ **எல்லா வினாக்களிற்கும் விடை எழுதுக.**

01. 1. இரட்டைக்கை முத்திரை என்பதன் மறுபெயர் யாது?
    2. இரட்டைக்கை முத்திரைகள் எத்தனை?
    3. அர்த்தசந்திரன் முத்திரை பிடித்துச் செய்யப்படும் இரட்டைக்கை முத்திரை யாது?
    4. இரட்டைக்கை முத்திரைகளில் முதல் பத்தினை வரிக்கிரமாகக் கருத்துடன் எழுதுக.

(2+1+2+10 = 15 புள்ளிகள்)

02. 1) பின்வரும் மாதங்களிற்குரிய நிகழ்வுகளை எழுதுக.
    1. தை
    2. பங்குனி
    3 ஆவணி
    4. வைகாசி
    5. மார்கழி (05 புள்ளிகள்)

    2) பரதம் பற்றி 05 வாக்கியங்களை எழுதுக. (10 புள்ளிகள்)

03. 1. பரத இலட்சணங்கள் எத்தனை?
    2. பரத இலட்சணங்களை எழுதுக.
    3. அவை ஒவ்வொன்றைப் பற்றியும் எழுதுக. (2+3+10 = 15 புள்ளிகள்)

04. 1. கிராமிய நடனம் என்றால் என்ன?
    2. கிராமிய நடனங்கள் எவை?
    3. சந்தோசத்தின் நிமித்தம் ஆடப்படும் கிராமிய நடனங்கள் 02 தருக.
    4. மேற்கூறிய நடனங்களில் ஒன்றினைப்பற்றி 05 வாக்கியங்கள் எழுதுக. (1+2+2+10 = 15 புள்ளிகள்)

LMDUnit Education கல்வி අධ්‍යාපන

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457